தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்



International Journal of Tamil Language and Literary Studies
*A Bi-Yearly Peer-Reviewed International Journal*
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Issue - 1, July 2020 Available at: www.ijtlls.com

# திருக்குறளில் இல்வாழ்க்கை

## Familial Life in *Thirukkural*

**முனைவர் சு.விஜயா கலைவாணி,** தமிழ் இணைப்பேராசிரியர், ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி -2
**Dr.S. Vijayakalaivani,** Associate Professor of Tamil, A.P.C. Mahalaxmi College for Women, Thoothukudi – 2.
**ORCiD: https://orcid.org/0000-0002-9812-0267**
**DOI: 10.38067/ijtlls.2020.v03i01.003**

## Abstract

*In the series of 'Patinenkilkanakku', "Thirukkural" is one of the oldest poems which emphasizes 'non-violence' and 'moral vegetarianisim' as virtues for an individual. The Thirukkural is originally titled as 'Muppal'. The text has been categorized into three books, each with didactic teachings on life and its virtues. Aram - Dharma (virtues of life), Porul, - Artha (wealth) and Inbam - kama (love) are the basis of "Thirukkural". The text consists of 1,330 kurals or couplets in English. "Thirukkural" has 25 chapters each comprises of 10 couplets. The book of Inbam, in full "Inbattupal" also known as the book of love, the third book or book three. The book of 'Inbam' expounds the virtues and emotions involved in conjugal love between a man and a woman, or the quality of an individual within the set of life and intimacy and to have disciplined love life keeping aram as the base. Hence, the article justifies the related facts from the chosen sources.*

**Keywords:** Familial Life, Thirukkural, Valluvar. Tamil People, Life and Family.

### திருக்குறளின் சிறப்பு

எக்காலத்தும், எவ்விடத்தும், எல்லோராலும் போற்றக்கூடிய முறையில் வள்ளுவர் திருக்குறளை இயற்றியுள்ளார். தமிழ்ச் சான்றோர் திருக்குறளைப் போற்றியுள்ளார்.

**ஆயிரத்து முந்நூற்று முப்பதருங் குறளும்**
**பாயிரத்தினோடு பகர்ந்த தற்பின் - போயொருத்தர்**
**வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ**
**ராய்க்கேட்க வீற்றிருக்கலாம் (திருவள்ளுவமாலை பா. 16)**

எனக்குறளின் பெருமையைத் திருவள்ளுவமாலையில், நத்தத்தனார் எடுத்துரைக்கிறார்.

ஜெர்மன் அறிஞர் ஆல்பர்ட் சுவைட்சன் என்பார் "இந்தியச் சிந்தனையும் அதன்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Issue - 1, July 2020 Available at: www.ijtlls.com

வளர்ச்சியும்" என்ற தமது நூலில் திருக்குறளைப் பாராட்டியுள்ளார். "திருக்குறள் போன்ற அற (ஒழுக்க) இலக்கியத்தை நான் கண்டதில்லை' எனப் போற்றுகிறார்.

திருக்குறள் யாப்பு வடிவத்தால் குறள் எனப் பெயர் பெற்றது. 'திரு' என்ற அடைமொழி சேர்ந்து 'திருக்குறள்' எனப் பெரியோர் வழங்கினர். குறள் உருவத்தால் சிறயது. வனப்பால், பொருட்சிறப்பால், ஆழத்தால், விரிவால் பெருஞ்சிறப்புடையது. குறளின் முதலடியில் நான்கு சீர்களும், இரண்டாம் அடியில் மூன்று சீர்களும் உள்ளன. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும் உறுதிப் பொருள்களாகும். மூன்று பகுதியாக ஆக்கப் பெற்றமையால் 'முப்பால்' எனப் பெயர் பெற்றது.

அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பகுப்பில் அறமும், பொருளும் அறக்கருத்துக்களையும், அறிவுரைகளையும் நேரடியாக விளக்குவன. இன்பம் கூறும் காமத்துப்பால், கவிச்சுவையுடன் நாடக முறையில் தலைவன், தலைவி, தோழி போன்ற பாத்திர உரையாடல் போக்கில் அமைந்துள்ளது. சங்ககால அகப்பொருள் அமைப்பு இருப்பினும் பரத்தையர் பிரிவுப் பகுதி இல்லை. ஒருவனும் ஒருத்தியும் வகுப்பு பேத மாறுபாடில்லாமல் காமமுற்றுக் காதலிக்கும் நிகழ்வுகள் களவியலில் கூறப்பட்டுள்ளது. இன்று வாழும் மாந்தரும் உணர்ந்து வாழக்கூடிய கருத்துக்களைக் கொண்டதாகக் கற்பியல் விளங்குகிறது.

'அறம்' என்பதற்கு இதுதான் பொருள் என யாரும் வரையறுத்துக் கூறமுடியாது. ஆனால் வள்ளுவர், அறமாவது 'மனத்துக்கண் மாசிலனாதல்' என்கிறார். மேலும் 'இன்சொலினதே அறம்' எனவும் மொழிகிறார். இத்தகைய அறத்தை 'இல்லறம்' 'துறவறம்' என இரண்டாகப் பிரித்தார் வள்ளுவர் 'இல்லறத்திற்கு விளக்காக விளங்கக்கூடியவர்கள் பெண்கள்'

**மனைக்கு விளக்காகிய வாணுதல் கணவன்**

**முனைக்கு விரம்பாகிய வென்வேல் நெடுந்தகை**

**(சுரிகை சாமிகுமாரன், திருவள்ளுவர் ஈராயிரம் விழா மலர் பக். 21)**

என்ற சங்கப்பாடல் இல்லறத்தில் மனைவி, கணவன் இருவரின் கடமையை எடுத்துரைக்கிறது.

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Issue - 1, July 2020 Available at: www.ijtlls.com

**இல்லறம்**

"கூடி வாழ்தல் மனித இயல்பு" என்று அரிஸ்டாடில் என்ற மேனாட்டு அறிஞர் கூறுகிறார். கூடி வாழ்தலில் சிறப்பினை இருவகையினராகப்பிரித்தனர். துறவறத்தின் கண் செயலாற்றுபவர் 'துறவிகள்' என்றும், இல்லறத்தின் கண் செயலாற்றுபவர் 'இல்வாழ்வார்' என்றும் பிரித்தனர். இரு அறங்களிலும் 'இல்லறமே சிறந்தது என்பது வள்ளுவர் போன்ற பெரியோர்களின் துணிவு எனலாம். இல்வாழ்க்கையே நல்வாழ்க்கை என்பர். இல்லறமல்லது நல்லறமில்லை என்பர். வள்ளுவரும் தம் குறளில்,

**அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்**
**போலுய்ப் பெறுவது எவன் (குறள் 46)**

என்று அறவழியல் இல்வாழ்க்கை வாழ்வது. இல்லறத்தை விட்டு வாழும் துறவறத்தை விட சிறந்தது என்கிறார். மேலும் தன்னையும் காத்து பிறரையும் காக்க வல்லது இல்லறம் இதனை வள்ளுவர்,

**இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றின் நின்ற துணை (குறள் 41)**

என்கிறார்.

தாம் மட்டும் நன்மையடைவதற்காகத் தவம் செய்வோரின் வாழ்க்கையை விடப் பிறர்நலம் கருதிய பலருக்கு நல்ல துணையாகிய இல்வாழ்க்கை சிறப்புடைத்து என்கிறார் வள்ளுவர்.

**ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை**
**நோற்பாரின் நோன்மை உடைத்து (குறள் 48)**

என்ற குறளில் நோற்பாரின், நோன்மையுடைய இல்வாழ்க்கையைச் சிறப்பிக்கிறார். ஆறம் இழுக்காது அன்பு செய்து இல்வாழ்க்கை வாழ்பவர் இவ்வுலக வாழ்விலேயே தெய்வநிலை அடைந்தவராக வள்ளுவரால் போற்றப்படுகிறார்.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும் (குறள் 48)**

என இல்வாழ்க்கையில் சிறந்தவனை வானுறையும் தெய்வத்துள் வைக்கிறார்.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Issue - 1, July 2020 Available at: www.ijtlls.com

ஆண்மகன் தன் வாழ்க்கையில் தெய்வ நிலையடையவும், அன்பைப் பெருக்கிக் கொள்ளவும், அறத்தைச் செய்யவும், இன்ப நலம் துய்க்கவும், ஒரு துளை வேண்டு நிற்கின்றார். தன் நலத்துக்கும், செயலுக்கும் உதவி செய்யத் தகுதி வாய்ந்த பெண்ணின் நல்லாள் ஒருத்தியை மணந்து கொள்கிறான். தன்னை அத்தகைய நிலைக்குத் தயார்படுத்திக் கொள்ளும் நிலை திருமணம் எனப்படுகிறது. "திருமணம் செய்து கொண்டு கணவனும், மனைவியுமாக இருவர் வாழ்கின்ற வாழ்க்கையை 'இல்லறம்' அல்லது கிருகஸ்த தருமம்' எனப்படுகிறது" என்று விளக்கிறார். துறைவன். (துறைவன், திருக்குறள் ஓர் அறிமுகம், பக். – 15) தொல்காப்பியர், திருமணத்தை 'கரணம்' என்கிறார்.

**கற்பெனப்படுவது கரணமொடு புரைக்**

**கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியை**

**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே (தொல். கற்பியல் நூ.14)**

என்ற நூற்பாவில் கிழவனும், கிழவனும் கிழத்தியும் சேர்ந்து வாழ்வதே திருமண வாழ்வு என்கிறார். இல்லறம் என்பது, "மனையாளோடு வீட்டிலிருந்து வாழ்தல்" என்கிறார் கவிராசர். "பெண்சாதியுடனே கூடி வீட்டிலே இருந்து தருமத்தைப் பண்ணிக் கொண்டு வாழ்கிற வாழ்க்கையே சிறப்பு" என்கிறார் பரிமேலழகர்.

கற்புடையாளோடு இருந்து இன்பம் துய்த்துவரும் அறவாழ்க்கையில் இல்லறக் கடமைளைப் புரிவதே இல்லறம் எனவும் குறிப்பிடுகின்றார்.

**வாழ்க்கைத் துணை நலம்**

மனித இனத்தில் புனிதமாக, தெய்வமாக, ஒளியாக, சுவையாக, சுகமாக, வாழ்வின் உயிராக மதிக்கப்படக் கூடியவர்கள் பெண்கள். இல்லத்தை ஆளும் தன்மையுடையவள் பெண் என்பதால் இல்லாள் என்றே வள்ளுவர் அழைக்கிறார். இல்வாழ்க்கையின் உயிர்நாடி பெண். ஆதலால், அவளை வாழ்க்கைத் துணை நலம் என்னும் சொல்லால் சிறப்பிக்கிறார்.

"வாழக்கைத்துணை நலம் என்றதனால் மனைவி மணாளனது வாழ்க்கையில் அறத்திற்கும் துணையாகின்றாள் பொருளுக்கும் துணையாகின்றாள்" (க.ப.

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Issue - 1, July 2020 Available at: www.ijtlls.com

அறவாணன், தமிழ்ச் சமுதாய வரலாறு, பக். 78). கணவனது வாழ்க்கைத் துணையாய் நின்று அன்பினால் ஒன்றி வாழும் மகளிர், வாழ்க்கைத் துணையெனப் பாராட்டப் பெற்றனர். மனையின் கண் இருந்து மனயைறம் நிகழ்த்தும் உரிமை மகளிர்க்கே வழங்கப் பெற்றது. மனையறக் கடமைகளில் மகளிலே பொறுப்புடையராய் இடைவிடாது வினை செய்து உழலும் ஆடவர்களை வினைமுடிவின் கண் வீட்டில் அமைதியாய் தங்கியிருக்கச் செய்து மனைவாழ்க்கைக்கு விளக்கம் தருவார் மகளிரேயாவார்.

**மனைமாட்சி**

மனைத்தக்க மாண்பாவது இல்லறவியலில் கூறுகின்ற அறமே மனைத்தக்க மாண்பாகும், பெண்ணை வாழ்க்கைக்கு முதலாக வைக்கிறார் வள்ளுவர்,

**மனைத்தக்க மாண்புடை யளாகித் தற்கொண்டான்**

**வளத்தக்க காள் வாழ்க்கைத்துணை (குறள் 51)**

என்கிறார். மனைத்தக்க மாண்பு என்பதற்கு “தான்பிறந்த குடிக்குத் தக்க ஒழுக்கம்” எனப் பொருள் கொள்கிறார். மனக்குடவர், மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகளை உடையாள் பெண் எனக் குறிப்பிடப்படுகிறது. அன்பு, இன்சொல் விருந்தயர்தல், செய்நன்றி மறவானம், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, பொறையுடைமை, ஈகை, புகழ் போன்றவையும் பெண்களுக்கு இன்றியமையாது வேண்டப்படக்கூடிய ஒழுக்கங்கள். மனைமாட்சிமை இயல்பாய உரிமை பூண்டவள் பெண்ணே எனக் குறிப்பிடுகின்றார் வள்ளுவர்.

“இல்லறத்திற்கு ஏற்ற பண்பு மனைவியிடத்தில் இல்லையானால் அந்த இல்வாழ்க்கை வேறு எவ்வளவு சிறப்புப் பெற்றிருந்தாலும் பயன் இல்லை” என்கிறார் டாக்டர் மு.வ. அவர்கள்.

**மனைமாட்சி இல்லாள் கண் இல்லாயின் வாழ்க்கை**

**எனைமாட்சித் தாயினும் இல் (குறள் 48)**

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்



International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Issue - 1, July 2020 Available at: www.ijtlls.com

என்கிறார் வள்ளுவர். வாழ்வு எத்துணைச் சீர் சிறப்புக்களோடு கூடியதானாலும், மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகள் இல்;லோதிடத்தில்லையாயின், அவ்வாழ்க்கை பாழாகிவிடும். இதனை திரு.வி.க. குறிப்பிடும்போது,

**மனைமாட்சி ஞாயிறு போன்றது மற்ற**

**மாட்சிகள் கோள்கள் போன்றன**

**ஞாயிறு இல்லாவிடத்துக் கோள்களுக்கு**

**ஒளி ஏது? ஆவைகள் இருந்தம் இல்லாதன**

**போலாகு மல்லவோ? வாழ்க்கையில் எல்லா**

**மாட்சிகளிருந்தும், அதன் கண்மனை**

**மாட்சி ஒன்றில்லை யாயின் அம்மாட்சிகளான**

**விளையும் பயன் என்னை? ஆவைகள்**

**பிணங்களை யொத்தே கிடக்கும் (திரு.வி.க. திருக்குறள் விரிவுரை பக்.471)**

என்கிறார் திரு.வி.க.

அரசியரின் கற்புமேம்பாட்டைக் கூறி வாழ்த்துவதைக் காண முடிகிறது. பெண்களைப் ‘பேதை’ எனவும் அறிவிலாதவர்கள் என்றும் கூறினார்.

**நுண்ணறிவுடையோர் நூலோடு பழகினும்**

**பெண்ணறி வென்பது பெரும் பேதைமைத்தே**

**(தெ.பொ.மீ. வள்ளுவரும் மகளிரும் பக். 13)**

என்றும் கூறினார்.

சிறையில் இடுவதுபோலப் பெண்ணை வீட்டில் வைத்துப் பூட்டினர். அவளது கற்புக்குக் காவல் வைத்தனர். காவல் மூலம் காக்கப் பெறும் கற்பு சந்தர்ப்பம் வரும் போது கெடும். “பெண்கள் இதயத்தால் விரும்பிக் காக்கும் கற்பே தலையாய கற்பு” என்கிறார். தெ.பொ.மீ.

**சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்**

**நிறைகாக்கும் காப்பே தலை (குறள் 57)**

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Issue - 1, July 2020 Available at: www.ijtlls.com

என்கிறார் வள்ளுவர். இல்லத்தை விட்டு வெளியே செல்லலாகாது எனத் தடுத்து அவளுரிமையைத் தடை செய்யும் முறையை அவர் விரும்பவில்லை. அத்தகைய சிறை காக்கும் காவலால் பயனில்லை. மகளிர் தம் நிறையால் தம்மைக் காத்துக் கொள்ளுதல் சிறப்பு என்கிறார்.

**மகளிருக்கு அணிகலம்**

மனையாளின் ஒழுக்கத்தாலே குடும்பம் அழகு பெறுகிறது. அந்த அழகுக்கு அணியாக அமைவது நன்மக்கட்பேறு. இதனையே வள்ளுவரும்;

**மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்**

**நன்கலம் நன் மக்கட்பேறு (குறள் 60)**

என்கிறார். இல்லற மாண்பிற்கு அணிகலமாவது நன்மக்கட்பேறு என்கிறார். ஒருவரின் இல்வாழ்க்கை அவருக்கும் பிறருக்கும் பயன்பட வேண்டுமானால், ஒரு குழந்தை இன்றியமையாதது. எத்துணை சிறப்புடைய வாழ்க்கையாக இருப்பினும் மக்கட்செல்வம் இல்லாத வாழ்க்கை சுவையற்றது.

**...இடைப்படக்**

**குறுகுறு நடந்து சிறுகைநீட்டி,**

**இட்டும் தொட்டும் கௌவியும் துழந்தும்**

**நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்**

**மயக்குறு மக்களை இல்லோர்க்குப்**

**பயக்குறை இல்லை தாம் வாழும்நாளே (புறம் பா. 188)**

என்ற பாடலில் பாண்டியன் அறிவுடை நம்பி குழந்தைப்பேறு இல்லாதவர்கள் தன் வாழ்நாளின் பயனை இழந்தவர்கள் என்கிறார்.

இல்வாழ்க்கையில் பெண் என்பவள் பெருமைக்குரிய இலக்கணங்களோடும், ஆண் என்பவள் ஆண்மைக்குரிய இலக்கணங்களோடும் வாழவேண்டும் என்பதே வள்ளுவரின் கருத்து.

**பேணாது பெண் விழை வானாக்கம் பெரியதோர்**

**நாணாக நாணுத் தரும் (குறள் 902)**

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Issue - 1, July 2020 Available at: www.ijtlls.com

என்கிறார்.

மனைவிக்கு அஞ்சுபவன் அமரர் போல இன்புற்று வாழ்ந்தாலும் பெருமையிலாதவன் என்கிறார். வள்ளுவர்

**இமையாரின் வாழினும் பாடிலரே யில்லாள்**

**அமையார் தோளஞ்சுபவர் (குறள் 906)**

என்கிறார்.

பெண்ணுக்கு ஏவல் செய்து வாழும் ஆணைவிட நாணத்தை இயல்பாக உடைய பெண்ணே பெருமை உடையவர் என்கிறார்.

**பெண் ஏவல் செய்துஒழுகும் ஆண்மையின் நாணுடைப்**

**பெண்ணே பெருமை உடைத்து (குறள் 907)**

என்கிறார்.

இல்வாழ்வில் இருவரும் ஒத்த நிலையினராய் ஒருவருக்கொருவர் துணையாய் அன்பு, செலுத்தி, இருவரும் உள்ளம் ஒன்றி, வாழ்தலே வீடும் நாடும் நலம் பெறும்.

**காதல் ஒருவனைக் கைப்பிடித்தே அவன்**

**காரியம் யாவினும் கைகொடுத்து… (பாரதியார் கவிதைகள்)**

என்று பாரதி காரியம் யாவிலும் கைகொடுக்கும் மனைவியைச் சிறப்பிக்கின்றார்.

**பிறனில் விழையாமை**

வள்ளுவர் பிறனில் விழையாமையை அறமாகக் கூறுகிறார். பிறருடைய இல்லாளைத் தவறான நோக்குடன் நோக்காமல் இருப்பது அறம் மட்டுமல்ல. அது ஒழுக்கமும் ஆகும் என்கிறார். வாழ்க்கையில் துன்பம் உண்டாக்கும் செய்கைகளில் ஒன்று பிறன்மனை நயத்தல் என்கிறது நாலடி.

**பிறன் மறையின்கட் செவிடாய்த் திறனித்**

**தேதிலா திரிற்கட் குருடனாய்த் தீய**

**புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல், யாதும்**

**அறங்கூற வேண்டா அவிற்கு (நாலடி பா. 158)**

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Issue - 1, July 2020 Available at: www.ijtlls.com

என்கிறது நாலடியார். மற்றவர்களின் மறைந்த கருத்துக்களைக் கேட்டலில் செவிடனாய், அயலார் மனைவியைக் காமக் கருத்துடன் நோக்குதலிற் குருடனாய் புறங்கூற்று மொழிகளைக் கூறுதலின் ஊமையாய் இருப்பதே சிறந்த அறம் என்கிறது நாலடி.

**பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு**

**ஆறன் அன்றோ ஆன்றஒழுக்கு (குறள் 148)**

என்கிறார் வள்ளுவர்.

**முடிவுரை**

பெண்மையின் இயல்புகளான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு போன்றவை திருக்குறளில் இடம் பெற்றுள்ளன. பெண்கள் பிறரால் கட்டுப்படுத்தப்படாது உரிமையுடன் வாழ வேண்டும் என வள்ளுவர் விரும்பினார். இல்லறக் கடமைகள் ஆற்றும் பெண்களை உயர்வாகக் குறிப்பிடுகின்றார் வள்ளுவர்.

**துணை நூற்பட்டியல்**

[1] அறவாணன், க.ப. - *அற்றை நாட்காதலும் வீரமும்.* பாரி நிலையம், சென்னை – 1, 1978.

[2] இளம்பூரணர் (உ. ஆ). – *தொல்காப்பியம், பொருளதிகாரம்,* திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்பகம், லிமிடெட், சென்னை – 1, 1974.

[3] சமண முனிவர்கள். *நாலடியார்,* திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்பகம், லிமிடெட், சென்னை – 1, 1972.

[4] திருவள்ளுவர். *திருக்குறள்,* திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை – 1, 1982.

[5] துரைசாமி பிள்ளை (உ.ஆ). *புறநானூறு,* திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்பகம், லிமிடெட், சென்னை – 1, 1971.

[6] துறைவன் - *திருக்குறள் ஓர் அறிமுகம்,* பப்ளிக்கேஷன்ஸ் டிவிஷன், தகவல் ஒலிபரப்பு அமைச்சகம், இந்திய சர்க்கார்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Issue - 1, July 2020 Available at: www.ijtlls.com

[7] தெ.பொ.மீ. *வள்ளுவரும் மகளிரும்*, சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை – 1, 1983.

**தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:**

**விஜயாகலைவாணி, சு.** “திருக்குறளில் இல்வாழ்க்கை.” *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, இதழ் 1, ஜீலை 2020, பக். 28-37. டிஒஐ: 10.38067/ijtlls.2020.v03i01.003.

**Cite this Article in English (*MLA 8 Style*) as:**

**Vijayakalaivani, S.** “Familial Life in *Thirukkural*.” *International Journal of Tamil Language and Literary Studies,* Volume. 3, Issue. 1, July 2020, pp. 28-37. DOI: 10.38067/ijtlls.2020.v03i01.003.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement:** இல்லை /NIL

**கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement:** இல்லை /Nil

**கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது. The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.